# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033640

1. District மாவட்டம் : சிவகங்கை | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 02/18 | Date: நாள் 23.03.18

2. (i) Act சட்டம்: இதச | Sections பிரிவுகள்: 120(B), 465, 468, 471, 477(A)

   (ii) Act சட்டம்: ஊ.த.ச. | Sections பிரிவுகள்: 13(1)(c) & (d)

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: - -

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2006. 2010 – 11 | Date to : நாள் வரை 2012 – 13

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.03.18 | Time : நேரம் 11.50 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — விரிவான விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் , 55 கிமீ வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.பீட்டர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அருளானந்தம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 வயது | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. ராஜசேகரன், செயலாளர், RD 106 திருக்கோளக்குடி கூட்டுறவு (தொடக்க வேளாண்மை) கடன் சங்கம் சிவகங்கை மாவட்டம்
   2. திரு. தங்கமணி, எழுத்தர், RD 106 திருக்கோளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சிவகங்கை மாவட்டம்
   3. திருமதி. பொற்கொடி தற்காலிக நகை மதிப்பீட்டாளர் — do –
   4. திரு. மாரிமுத்து, முன்னாள் நகை மதிப்பீட்டாளர் / எழுத்தர் — do –

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   விரிவான விசாரணை (Detailed Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சிவகங்கை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் 26.10.2013 தேதியிட்டு அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு. பற்குணம் அவர்களால் 22.05.2014ல் விரிவான விசாரணை பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்பு அவர் பணிமாறுதலில் சென்றதால் மேற்படி விசாரணை காவல் ஆய்வாளர் திரு.ரகுபதி அவர்களால் தொடரப்பட்டு அதன்பிறகு இந்த விரிவான விசாரணை என்னால் தொடரப்பட்டு கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் கண்டறியப்பட்டுள்ளது.

1வது எதிரி திரு.S.ராஜசேகரன் என்பவர் சிவகங்கை மாவட்டம் RD106 திருக்கோளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளராக கடந்த 14.02.1989 முதல் பணியாற்றி வருகிறார். 2வது எதிரி திரு.A.தங்கமலை என்பவர் மேற்படி சங்கத்தில் 16.05.1996 முதல் விற்பனையாளராகவும் 01.11.2012 முதல் எழுத்தராகவும் பணியாற்றி வருகிறார். இதற்கிடையில் மேற்படி சங்கத்தில் மார்ச் 2006 முதல் 31.10.2012 வரை எழுத்தர் பொறுப்பை

(தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.Chandran Rank Inspector... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 23.03.18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.03.18 at 12.50 hrs

Name: பெயர் A. PETER
Rank: நிலை Inspector No. எண்
Vigilance & Anti Corruption
Sivagangai

* GCP-240-14(Type 21 90,000 Cps 21.3 ...HCL-12)p 2

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.02/2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

2வது எதிரி கூடுதலாக கவனித்து வந்துள்ளார். 3வது எதிரி திருமதி.பொற்கொடி என்பவர் 15.03.2010 முதல் திருக்கோளக்குடி நியாயவிலைக் கடையின் விற்பனையாளராக பணியாற்றி வருகிறார். மேற்படி சங்கத்தின் நகை மதிப்பீட்டாளர் பொறுப்பை 3வது எதிரி கூடுதலாக டிசம்பர் 2011 முதல் கவனித்து வருகிறார். இவர்கள் ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 2(c)ன்படி பொது ஊழியர் ஆவார்கள்.

4வது எதிரி திரு.மாரிமுத்து என்பவர் 01.01.1985 முதல் 28.02.2006 வரை எழுத்தராக பணியாற்றி கடந்த 28.02.2006ல் பணி ஓய்வு பெற்றுள்ளார். பின்னர் மேற்படி சங்கத்தில் 12.04.2008 முதல் 14.12.2014 வரை மேற்படி சங்கத்தின் நகை மதிப்பீட்டாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டதால் தனிநபர் ஆவார்.

சிவகங்கை மாவட்டம், RD106 திருக்கோளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் முதன்மை செயலரே நிர்வாக அலுவலர் ஆவார். இச்சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு வட்டியில்லா விவசாய நகைக்கடன், குறுகியகால கடன், மத்தியகால கடன் ஆகியவற்றை வழங்குவதும், வசூலிப்பதும் இச்சங்கத்தின் செயலரின் பணியாகும். மேலும் இச்சங்கத்திலுள்ள பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பராமரிப்பது செயலர் மற்றும் எழுத்தரின் பணியாகும். நகை கடன் பெறும் உறுப்பினர்களின் நகைகளை மதிப்பீடு செய்வது நகை மதிப்பீட்டாளரின் பணியாகும்.

விரிவான விசாரணை அறிக்கையில் சிவகங்கை மாவட்டம் RD106 திருக்கோளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாய நகைக்கடனில் கீழ்க்கண்ட முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளது. 1. வட்டியில்லாத விவசாய நகை கடன் வழங்க அதிகாரமுள்ளவரான 1வது எதிரி செயலர் திரு.ராஜசேகரன், 2வது எதிரி எழுத்தர் திரு.தங்கமலை மற்றும் 3வது எதிரி விற்பனையாளர் / நகை மதிப்பீட்டாளர் திருமதி.பொற்கொடி ஆகியோருடன் குற்றமுறு சதி செய்து கடந்த 2010-11, 2011-12, 2012-13 ஆகிய ஆண்டுகளில் இச்சங்கத்தின் 27 உறுப்பினர்களுக்கு ரூ.14,71,500/- வரை வட்டியில்லா விவசாய நகைக் கடன் வழங்கியது போல் சங்க உறுப்பினர்களான விவசாயிகளின் பெயர், முகவரியினை பயன்படுத்தி பதிவேடுகளில் வேண்டுமென்றே ஏமாற்றும் உட்கருத்துடன் பொய்யாக பதிவுகள் மேற்கொண்டு பொய்யாவணம் புனைந்து அதில் உறுப்பினர்களின் கையெழுத்துகளைப் போல் போலியாக கையெழுத்துகளைப் போட்டு அதை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தி மோசடி செய்து 1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் முறைகேடாக பயனடைந்துள்ளார்கள். மேற்படி தொகைக்கான வட்டியாக ரூ.61,268/-யை அரசு செலுத்தியுள்ளது. அந்த வகையில் 1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் ரூ.61,268/- அரசுக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தி குற்றமுறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது விரிவான விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

2. மேலும் 1வது எதிரி செயலர் திரு.ராஜசேகரன், 2வது எதிரி எழுத்தர் திரு.தங்கமலை மற்றும் 4வது எதிரி திரு.மாரிமுத்து, முன்னாள் எழுத்தர் / நகை மதிப்பீட்டாளர் ஆகியோருடன் குற்றமுறு சதி செய்து RD106, திருக்கோளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கத்தில் மேற்படி சங்க உறுப்பினர்களான 7 விவசாயிகளின் பெயர் மற்றும் முகவரிகளை பயன்படுத்தி 19 விவசாய நகைக்கடன்கள் வழங்கியது போல் போலியான ஆவணங்கள் தயார் செய்து அதில் உறுப்பினர்களின் கையெழுத்துகளைப் போல் போலியாக கையெழுத்துகளைப் போட்டு பதிவேடுகளில் பொய்யாக பதிவு செய்து அதை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தி ரூ.4,01,800/–ஐ விவசாய நகை கடனாக உறுப்பினர்களுக்கு வழங்கியது போல் மோசடி செய்துள்ளார்கள். மேற்படி தொகைக்கு அரசு ரூ.5,811/–யை வட்டியாக செலுத்தியுள்ளது. மேலும் அரசு அசல் ரூ.4,01,800/–யும் வட்டித்தொகை ரூ.5,811/–யும் ஆகமொத்தம் ரூ.4,07,611/–யும் தள்ளுபடி செய்துள்ளது. இதன் மூலம் எதிரிகள் 1,2 மற்றும் 4 ஆகியோர் ரூ.4,07,611/–யை அரசுக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தி கள்ளமனதுடன் கையாடல் செய்து குற்றமுறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

எனவே 1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் இந்த செயல்களானது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 120(B), 465, 468, 471, 477(A) மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவுகள் 13(1)(c) & (d) உ/இ 13(2)ன்படி தண்டிக்கத்தக்க குற்றங்களாகும்.

எனவே இன்று 23.03.2018ம்தேதி 11.50 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது காலம் 7ல் கண்ட எதிரிகள் மீது இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 120(B), 465, 468, 471, 477(A) இ.த.ச மற்றும் 13(1)(c) & (d) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம், 1988ன் படி சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 02/2018 ன்படி மேற்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கையை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை இவ்வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக திரு.சந்திரன், காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, சிவகங்கை அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்பந்தபட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் வைக்கப்பட்டது.

**Inspector of Police**
**Vigilance and Anti-Corruption**
**Sivagangai.**